**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, மதுராந்தகம்**

**முன்னிலை:- திருமதி.N.வள்ளியம்மா, B.Sc., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண் 1, மதுராந்தகம்.**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 08 ஆம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 237/2025**

| | |
|---|---|
| அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>ஜி1 மதுராந்தகம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 260/2025<br>பிரிவுகள். 296(b), 115(2), 118(1), 351(3) of BNS.<br>r/w 4 of TNPHW Act | ...குற்றமுறையீட்டாளர் |
| /எதிரிடை/ | |
| A1–சலோமியா, வயது.47, த/பெ.மகேந்திரன்,<br>எண்.12, நாகத்தம்மன் கோயில் தெரு,<br>வீராணகுன்னம் கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A2–சுந்தரமூர்த்தி, வயது.23, த/பெ.மகேந்திரன்,<br>எண்.12, நாகத்தம்மன் கோயில் தெரு,<br>வீராணகுன்னம் கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A3–ரவி, வயது.56, த/பெ.ஆறுமுகம்,<br>எண்.13, நாகத்தம்மன் கோயில் தெரு,<br>வீராணகுன்னம் கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A4–ஏழுமலை, வயது.26, த/பெ.ரவி,<br>எண்.13, நாகத்தம்மன் கோயில் தெரு,<br>வீராணகுன்னம் கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா,<br>செங்கல்பட்டு மாவட்டம். | ..எதிரிகள் |

மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு ROC. No. 814/2020/RG/F1, Dt 07.04.2021 இன் படியான இவ்வழக்கின் விவரங்கள் கீழ்வருமாறு :-

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. I, Madurantakam. |
| 2. | Name of the Judge | Tmt. N.Valliamma, B.Sc., B.L., |
| 3. | Date of Judgment | 08.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC.237/2025<br>TNCG – 15– 002197–2025 |
| 5. | Name of the Parties of the case | State Govt,<br>Inspector of Police, Madurantakam PS.<br>**Complainant** |
| | | A1–சலோமியா, வயது.47, த/பெ.மகேந்திரன்,<br>A2–சுந்தரமூர்த்தி, வயது.23, த/பெ.மகேந்திரன்,<br>A3–ரவி, வயது.56, த/பெ.ஆறுமுகம்,<br>A4–ஏழுமலை, வயது.26, த/பெ.ரவி,<br>**Accused** |
| 6. | Date of Occurrence | 30.05.2025 |
| 7. | Date of Complaint | 31.05.2025 |
| 8. | Date of Arrest if any and remand | A1–A4– Anticipatory bail–26.06.2026 |
| 9. | Period of Remand of the Accused | --- |
| 10. | Date of release on bail | A1–A4– Anticipatory bail–26.06.2026 |
| 11. | Date of Final Report | 18.09.2025 |
| 12. | Date of Committal of the case to the Court of Sessions | --- |
| 13. | Date of Questioning of the accused U/s. 316 of BNSS | 02.12.2025 |
| 14. | Date of Examination in Chief and Cross Examination of the Witnesses | |

| Witness | Cheif | Cross |
|---|---|---|
| PW1 | 03.02.2026 | 03.02.2026 |
| PW2 | 26.02.2026 | 26.02.2026 |
| PW3 | 03.03.2026 | 03.03.2026 |
| PW4 | 03.03.2026 | 03.03.2026 |
| PW5 | 03.03.2026 | 03.03.2026 |

| | | |
|---|---|---|
| PW6 | 03.03.2026 | 03.03.2026 |
| PW7 | 10.03.2026 | 10.03.2026 |
| PW8 | 19.05.2026 | 19.05.2026 |

| | | |
|---|---|---|
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 317 of the Code | ------ |
| 16. | Date of Examination of the Accused U/s.351 of the BNSS | 22.05.2026 |
| 17. | Details of abscondence of an accused and his appearance / production as the case may be | Nil |
| 18. | Grant of Stay by Superior Courts and the results there of | ------ |
| 19. | Date of Commencement of Trial | 18.09.2025 |
| 20. | Date of Closure of Trial | 22.05.2026 |
| 21. | Date of Sentence of Order | 08.06.2026 |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | --- |
| 23. | If any delay, give Explanation | --- |

*********************

இவ்வழக்கானது 18.09.2025ம் இந்நீதிமன்றத்தால் கோப்பில் எடுக்கப்பட்டு இறுதி விசாரணைக்காக 22.05.2026-ம் தேதியன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் திருமதி.M.நித்யா நிலை -2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. திலகராஜ் அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய இவ்வழக்கில் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**1.** இவ்வழக்கானது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) of BNS. r/w 4 of TNPHW Act–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதை கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**2.** இவ்வழக்கின் சாட்சி–1 திரு.விநாயகம் என்பவர் வீராணக்குன்னம் கிராமத்தில் புதிதாக வீடு கட்டி வரும் நிலையில் ஏ1 எதிரி சலோமியா என்பவர் தனது வீட்டின் கழிவுநீரை விநாயகம் புதிதாக கட்டிவரும் செப்டிக் டேங்கில் விட்டது சம்மந்தமாக சாட்சி விநாயகம் என்பவர் கடந்த 30.05.2025ம் தேதி 19.00 மணியளவில் ஏ1 எதிரி சலோமியாவிடம் கேட்டதற்கு ஏ1 எதிரி சலோமியா என்பவர் சாட்சி விநாயகத்தை பார்த்து பொட்டை பாடு என அசிங்கமாக திட்டியும், ஏ1 எதிரி சலோமியாவின் மகனான ஏ2 எதிரி சுந்தரமூர்த்தி என்பவர் கையில் இரும்பு குழாய் பழுப்புடன் தலையில் அடித்துள்ளார். அதை பார்த்து தடுக்க வந்த சாட்சி விநாயகத்தின் மனைவி நீலா மற்றும் இளைய மகள் கௌசல்யா ஆகியோரை எதிரிகள் சலோமியா, சுந்தரமூர்த்தி மற்றும் எதிரிகளின் உறவினர்களான ரவி, ஏழுமலை ஆகியோர் அசிங்கமாக திட்டி, தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி, கைகளால் அடித்தும், எதிரிகள் ஒன்று சேர்ந்து மேற்படி சாட்சிகளை பார்த்து டேங்க் குழியில் தள்ளி காலி செய்துவிடுவோம் என கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இச்சம்பவத்தில் சாட்சி விநாயகத்திற்கு தலையில் காயமும், சாட்சி நீலாவிற்கு உடல் முழுவதும் வலியும், சாட்சி கௌசல்யாவிற்கு வலது கை முட்டியில் காயமும் ஏற்பட்டு மூவருக்கும் சொற்பகாயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) of BNS r/w 4 of TNPHW Actன் கீழ் தண்டிக்கப்படதக்கவர்கள் என்று மதுராந்தகம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3.** குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், வழக்கினை 18.09.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் முன் பிணையில் சென்றிருந்ததால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரானதன் பேரில் பிரிவு 230 of BNSS கீழ் குற்றப் பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள்

இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து பிரிவு 263 of BNSS ன் கீழ் எதிரிகளின் மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(2) of BNS. r/w 4 of TNPHW Act ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் குறித்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே பிரிவு 265 of BNSS ன் கீழ் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:–</u>**

**5.** அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 7 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அரசுத் தரப்பால் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்தார்.

**6.** இவ்வழக்கின் புகார்தாரரான குற்றமுறையீட்டாளர் நாகத்தம்மன் கோயில் தெருவில் வசித்து, அங்கு புதிதாக வீடு கட்டி வருவதால், அந்த வீட்டின் அருகே குடியிருக்கும் மகேந்திரன் என்பவரின் மனைவி சலோமியா என்பவர் அவர் வீட்டின் கழிவுநீரை குற்றமுறையீட்டாளர் புதிதாக கட்டிவரும் வீட்டின் செப்டிக் டேங்கில் விட்டதால், அதை கேட்க சென்ற குற்றமுறையீட்டாளரை பார்த்து எதிரி நான் அப்படிதான் விடுவேன் என்று சொன்னார். கடந்த 30.05.2025ம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் குற்றமுறையீட்டாளர் போய் கேட்டதற்கு அவரை அசிங்கமாக பொட்டை

பாடு என திட்டியுள்ளார். குற்றமுறையீட்டாளர் ஏன் என்னை அசிங்கமாக திட்டுகிறாய் என கேட்டதற்கு எதிரி சலோமியாவின் மகன் சுந்தரமூர்த்தி என்பவர் ஓடி வந்து டேய் தெவிடியா பையா என அசிங்கமாக திட்டி, கையில் வைத்திருந்த இரும்பு குழாய் பைப்பால் குற்றமுறையீட்டாளரின் தலையின் இடதுபக்கம் அடித்ததில் குற்றமுறையீட்டாளருக்கு இரத்த காயம் ஏற்பட்டது. குற்றமுறையீட்டாளர் வலி தாங்காமல் கத்தவே குற்றமுறையீட்டாளரின் மனைவி நீலா மற்றும் மகள் கௌசல்யா ஆகியோர் வந்து தடுத்த போது, அவர்களையும் மேற்கண்ட நபர்கள் மற்றும் அவரின் உறவினர்களான ரவி மற்றும் ஏழுமலை ஆகியோர்கள் அசிங்கமாக திட்டி, குற்றமுறையீட்டாளரின் மனைவியையும் மகளையும் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி, கைகளால் அடித்துவிட்டார்கள். அந்த பிரச்சினையை அப்பகுதியின் வார்டு உறுப்பினர்களான பிச்சைமுத்து மற்றும் சேகர் ஆகியோர்கள் மடக்கினார்கள். அப்போது மேற்கண்ட நபர்கள் புகார்தாரர் மற்றும் புகார்தாரரின் மனைவி மற்றும் மகளை செப்டிக் டேங்குழியில் தள்ளி காலி செய்துவிடுவோம் என மிரட்டினார்கள். உடனே 108 ஆம்புலன்ஸ் மூலம் அவர்கள் மூவரும் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சையில் இருந்த போது, மதுராந்தகம் காவலர் புகார் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அவர் படிக்க கேட்ட போது குற்றமுறையீட்டாளர் சொன்னபடி இருந்தது என்றும் புகாரில் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**7.** இந்த வழக்கில் அ.சா.1 தன்னுடைய வாய்மொழி சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியும். 30.05.2025ம் தேதி மாலை 6.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் வீட்டின் கழிவு தண்ணீரை எங்கள் வீட்டில் விட்டார்கள். இது சம்மந்தமாக நான் அவர்களிடம் கேட்டதற்கு அவர்கள் நாங்கள் தண்ணீரை விடுவோம் உங்களால் என்ன செய்யமுடியுமோ செய் என்று சொன்னார்கள். நான் எங்கள் ஊர் தலைவரிடம் சொன்னேன். அதற்கு எங்கள் வார்டு உறுப்பினர் பிச்சைமுத்து ஆஜர் எதிரிகளிடம் கேட்டபோது, ஆஜர் எதிரிகள் கட்டை, கொம்பு மற்றும் பைப் எடுத்து வந்து உன்னை அடித்து இந்த குழியில் புதைத்துவிடுவோம் என்று ஆஜர் எதிரி சலோமியா என்னை குனியவைத்து கையால் அடித்தார். எனது கணவரை ஆஜர் எதிரி சுந்தரமூர்த்தி பைப்பால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். தடுக்க வந்த எனது மகள் கௌசல்யாவை எதிரி சுந்தரமூர்த்தி நைட்டியை

பிடித்து கிழித்துவிட்டார். காயம்பட்ட எங்களை அங்கிருந்த நபர்கள் ஆம்புலன்ஸ் மூலம் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**8.** அ.சா.2 தனது வாய்மொழி சாட்சியத்தில் நான் வீராணக்குன்னம் வார்டு உறுப்பினர். சலோமியா என்பவருக்கும் நீலா என்பவருக்கும் எதிர் எதிரே வீடு உள்ளது. தேதி மாதம் ஞாபகமில்லை. சுமார் 3 மாதத்திற்கு முன்பு ஒரு நாள் ஆஜர் எதிரி சலோமியா என்பவரும், நீலா என்பவரும் போன் செய்து கால்வாய் பிரச்சணை இருப்பதாக போன் செய்து சொன்னார்கள். நான் சென்று கேட்டேன். அவ்வாறு கேட்டுக் கொண்டிருக்கும்போதே இருதரப்பினருக்கும் வாய் சண்டை ஏற்பட்டு பின்னர் இருவரும் அடித்துக்கொண்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**9.** அ.சா.3 தனது சாட்சியத்தில் நான் எனது ஊரில் புதிதாக வீடு கட்டியுள்ளேன். ஆஜர் எதிரிகள் என் வீட்டின் எதிரே வசிக்கிறார்கள். எதிரிகள் அவர்களுடைய வீட்டின் செப்டிக்டேங் தண்ணீர் மற்றும் கழிவு நீர் தண்ணீரை எங்கள் வீட்டின் செப்டிக்டேங்கில் விட்டார்கள். 30.05.2025 அன்று மாலை 7.00 மணியளவில் சலோமியா என்பவரிடம் கேட்டேன். அப்போது பேசிக் கொண்டிருக்கும்போது சலோமியா, தேவி மற்றும் இரண்டு பெண்கள் என்னுடைய கை, கால்களை பிடித்துக் கொண்டார்கள். அப்போது எதிரி சுந்தரமூர்த்தி என்பவர் தண்ணீர் பைப்பால் என் தலையில் அடித்துவிட்டார். அதை தடுக்க வந்த என் மனைவி நீலா மற்றும் மகள் கௌசல்யா என்பவரை எதிரிகள் அடித்து கீழே தள்ளி என் மகளின் நைட்டியை கிழித்துவிட்டார்கள். மேலும் எதிரிகள் என்னை பொட்டை, பாடு என்று அசிங்கமாக பேசி, அந்த செப்டிக் டேங்கில் தான் தண்ணீரை விடுவோம் யாரும் எங்களை ஒன்றும் செய்யமுடியாது என்று கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகார் வாக்குமூலத்தை நான்தான் கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.** அ.சா.4 தனது வாய்மொழி சாட்சியத்தில் 30.05.2025 ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு மேல் என் அப்பாவை சுந்தரமூர்த்தி, சலோமியா, ஏழுமலை, ரவி ஆகியோர்

அடித்தார்கள். அப்போது சண்டை பெரிதானதால் நானும் என் அம்மாவும் சென்றோம். அப்போது சுந்தரமூர்த்தி என்பவர் என்னுடைய நைட்டியை பிடித்து இழுத்து அடித்தார். சலோமியாவும், தேவி என்பவரும் என் அப்பாவின் கையை பிடித்துக் கொண்டார்கள், சுந்தரமூர்த்தி என் அப்பாவை இரும்பு தண்ணீர் பைப்பால் அடித்தார். சண்டையின் போது நான் கையில் என் அக்காவின் குழந்தையை வைத்திருந்தேன். சலோமியா என்பவர் ஜல்லி கல்லால் என்னை அடித்தார். அது குழந்தைமேல் பட்டால் என்ன ஆகும் என்று கேட்டேன். அதற்கு அவர் குழந்தை என்ன செத்தா போகும் என்று கேட்டார். அவர்கள் வீட்டின் சாக்கடை தண்ணீரை எங்கள் வீட்டு செப்டிக் டேங்கின் மீது விடுகிறார்கள், அதை கேட்டதால் சண்டைக்கு வருகிறார்கள். மேற்படி சம்பவம் தொடர்பாக என் அப்பா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11.** அ.சா.5 தனது வாய்மொழி சாட்சியத்தில் எதிரிகள் வீடும் புகார்தாரர் வீடும் எதிரெதிரே உள்ளது. இருதரப்பினருக்கும் கழிவு நீர் விடுவது தொடர்பாக அடிக்கடி சண்டை வரும். நாங்கள் பலமுறை எடுத்துக்கூறி இருதரப்பினரும் சண்டை போட்டுக் கொள்வார்கள். இந்த நிலையில் கடந்த 30.05.2025 ம் தேதி இருதரப்பினரும் அடித்துக் கொண்டார்கள், அதில் விநாயகம் என்பவருக்கு தலையில் அடிபட்டுவிட்டது. நாங்கள் சண்டையை மடக்கிவிட்டு அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12.** அ.சா.6 தனது வாய்மொழி சாட்சியத்தில் தேதி மாதம் ஞாபகமில்லை. விநாயகம் என்பவருக்கும் யாருக்கோ சண்டை நடந்ததாக சொன்னார்கள். மறுநாள் என் சித்தப்பா வீட்டிற்கு செல்லும் போது போலிசார் படம் வரைந்து விசாரணை செய்தார்கள். படம் வரைந்ததற்காக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** அ.சா.7 தனது வாய்மொழி சாட்சியத்தில் கடந்த 30.05.2025 ம் தேதி மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்த போது இரவு 8.40 மணியளவில் விநாயகம் என்பவர் தன்னை 4 தெரிந்த நபர்கள் கத்தி மற்றும் கோடாரி கொண்டு இரவு 7.00 மணியளவில் தன்னுடைய வீட்டருகே தாக்கியதாக சிகிச்சைக்கு வந்த நபரை

பரிசோதித்த போது அவருக்கு இடது தலை பகுதியில் 3x1 Cm அளவில் கிழிந்த காயம் ஏற்பட்டது. அவரை உள் நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். பின்னர் அன்றைய தினம் 8.45 மணிக்கு நீலா என்பவர் தன்னை 4 தெரிந்த நபர்கள் கையால் உடல் முழுவதும் தாக்கியதாக சிகிச்சைக்கு வந்த நபரை பரிசோதித்தபோது, அவருக்கு உடல் முழுவதும் வலி இருப்பதாக சொன்னார். நான் அவரை உள்நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். பின்னர் அன்றைய தினம் 8.50 மணிக்கு கௌசல்யா என்பவர் தன்னை 4 தெரிந்த நபர்கள் கையால் அவரது வலது கையில் தாக்கியதாக சிகிச்சைக்கு வந்த நபரை பரிசோதித்த போது அவருக்கு வலது கையில் 3x0.5 cm அளவில் கிழிந்த காயம் இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று அளித்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14.** அ.சா.8 இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இந்த வழக்கை பற்றி விரிவாக சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாய்மொழி சாட்சிகள் மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ததில், அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் புகார் சங்கதிகளை அனுசரித்து அரசு தரப்புக்கு ஆதரவாக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர்.

**15.** அ.சா.3 அளித்த புகார் வாக்குமூலத்தில் அ.சா.3 ன் வீடும் எதிரிகளின் வீடும் எதிர்எதிரே இருப்பதாகவும், புகார்தாரர் கட்டும் புதிய வீட்டின் செப்டிக் டேங்கில் 1 ம் எதிரி அவரது வீட்டின் கழிவு நீரை அந்த செப்டிக் டேங்கில் விட்டதாகவும், இது தொடர்பாக அ.சா.3 30.05.2025 ம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் சென்று எதிரிகளிடம் கேட்ட போது, எதிரிகள் அவரை அசிங்கமாக திட்டியதாகவும், 2 ம் எதிரி அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த குழாய் பைப்பால் அ.சா.3 ன் தலையில் அடித்து இரத்த காயம்

ஏற்படுத்தியதாகவும், அதை கேட்க வந்த அ.சா.3 ன் மனைவி மற்றும் மகளை எதிரிகள் அனைவரும் அசிங்கமாக திட்டி, கீழே தள்ளி கையால் அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**16.** மேற்கண்ட அ.சா.3 அவரது வாய்மொழி சாட்சியத்தில் 30.05.2025 அன்று மாலை 7.00 மணியளவில் சலோமியா என்பவரிடம் கேட்டேன். அப்போது பேசிக் கொண்டிருக்கும்போது சலோமியா, தேவி மற்றும் இரண்டு பெண்கள் என்னுடைய கை, கால்களை பிடித்துக் கொண்டார்கள். அப்போது எதிரி சுந்தரமூர்த்தி என்பவர் தண்ணீர் பைப்பால் என் தலையில் அடித்துவிட்டார். அதை தடுக்க வந்த என் மனைவி நீலா மற்றும் மகள் கௌசல்யா என்பவரை எதிரிகள் அடித்து கீழே தள்ளி என் மகளின் நைட்டியை கிழித்துவிட்டார்கள் என சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தின் போது அ.சா.3 ன் கையை பிடித்து கொண்டதாக கூறப்படும் மற்ற 2 பெண்கள் யார் என்பதை பொறுத்து அ.சா.3 ன் வாய்மொழி சாட்சியத்தில் எவ்வித விளக்கமும் இல்லை. அ.சா.3 ன் மகளான கௌசல்யா என்பவரை எதிரிகள் அடித்து கீழே தள்ளி அவரது நைட்டியை கிழித்துவிட்டார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

**17.** அ.சா.3 ன் மனைவியான அ.சா.1 நீதிமன்றத்தில் அளித்த முதல் விசாரணை சாட்சியத்தில் அவர்களுக்கும் எதிரிகளுக்கும் இடையேயான கழிவு நீர் பிரச்சினையை வார்டு உறுப்பினரிடம் கூறியதாகவும், மேற்படி பிரச்சினையை பற்றி வார்டு உறுப்பினர் எதிரிகளிடம் கேட்ட போது, எதிரிகள் கட்டை, கொம்பு மற்றும் பைப் கொண்டு வந்து அடித்து இந்த குழியில் புதைத்துவிடுவோம் என்று கூறியதாகவும், எதிரி சலோமியா அவரை குனிய வைத்து கையால் அடித்ததாகவும், எதிரி சுந்தரமூர்த்தி அ.சா.4 ன் நைட்டியை பிடித்து கிழித்துவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 இவ்வழக்கின் எதிரியான சலோமியா மற்றும் சுந்தரமூர்த்தி ஆகியோரை தவிர மற்ற எதிரிகளான ரவி மற்றும் ஏழுமலை என்ன செய்தார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அ.சா.1 குறுக்கு விசாரணையின் போது, *அவர்களில் யார் யார் எந்தெந்த ஆயுதங்களால் அடித்தார்கள் என்றால் எதிரிகள் மண்வெட்டி, கத்தி, கடப்பாரை ஆகிய ஆயுதங்கள் வைத்திருந்தார்கள். யார் என்ன ஆயுதம் வைத்திருந்தார்கள் என்றால்*

*ரவி மண்வெட்டி வைத்திருந்தார், சுந்தரமூர்த்தி இரும்பு பைப் வைத்திருந்தார், சலோமி அருவால் வைத்திருந்தார், ஏழுமலை என்ன வைத்திருந்தார் என்று நான் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.* அ.சா.1 அளித்த புகாரிலோ இந்த வழக்கின் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள மற்ற சாட்சிகளின் சாட்சியத்திலோ எதிரிகள் அரிவாள், மண்வெட்டி போன்ற ஆயுதங்கள் வைத்திருந்ததாக எந்தவித குறிப்பும் இல்லை. இந்த நிலையில் அ.சா.1 சம்பவத்தை மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறாரோ என்ற சந்தேகம் எழுகிறது.

**18.** மேலும் அ.சா.4 தன்னுடைய வாய்மொழி சாட்சியத்தில் என் அப்பாவை சுந்தரமூர்த்தி, சலோமியா, ரவி, ஏழுமலை ஆகியோர்கள் அடித்தார்கள் என்றும், அப்போது அங்கே சென்ற அ.சா.4 ன் நைட்டியை சுந்தரமூர்த்தி என்பவர் பிடித்து இழுத்து அடித்ததாகவும், அ.சா.3 ஐ சலோமியாவும், தேவியும் கையை பிடித்து கொண்டனர் என்றும், சுந்தரமூர்த்தி அ.சா.3 ஐ இரும்பு தண்ணீர் பைப்பால் அடித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 அளித்த புகாரில் அவரை எதிரி சுந்தரமூர்த்தி அடித்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் அ.சா.3 ஐ அடித்தாக புகாரில் எவ்வித குறிப்பும் இல்லை. மேலும் அ.சா.1 எதிரி சுந்தரமூர்த்தி அ.சா.3 ன் நைட்டியை பிடித்து கிழித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.4 எதிரி சுந்தரமூர்த்தி அவரது நைட்டியை பிடித்து இழுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.4 எதிரி சலோமி ஜல்லி கல்லால் அவரை அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அதை பற்றி புகாரிலும், குவிமுச பிரிவு 161 ன் கீழான வாக்குமூலத்திலும் எவ்வித குறிப்பும் இல்லை.

**19.** இந்த வழக்கில் அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்த அ.சா.1, அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர் ஒரே குடும்பத்தை சேர்ந்த நபர்கள். சம்பவத்தை நேரடியாக பார்த்த கண்ணுற்ற சாட்சிகள் பலர் இருந்தும் அவர்களை இந்த வழக்கில் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும் தனிபட்ட கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 மற்றும் அ.சா.5 ம் 03.05.2025 ம் தேதி குற்றமுறையீட்டாளர் தரப்பிற்கும் எதிரி தரப்பிற்கும் கழிவு நீர் விடுவது தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டதாகவும், அதை பற்றி பேசி கொண்டு இருக்கும் போதே இருதரப்பினரும் அடித்து கொண்டதாகவும் சாட்சியம்

அளித்துள்ளனர். மேற்படி தனிபட்ட சாட்சிகள் இருவரும் யார் யாரை அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

**20.** மேலும் அ.சா.3 கொடுத்த புகார் வாக்குமூலமானது 31.05.2025 அன்று மாலை 17.00 மணியளவில் பதிவு செய்யப்பட்டதாக அ.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையானது 01.06.2025 அன்று பதிவு செய்யப்பட்டதாக அ.சா.ஆ.5ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.ஆ.7 பார்வைமகசரில் வழக்கின் விசாரணை அதிகாரி 30.05.2025 அன்று சம்பவயிடம் சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயாரித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**21.** மேலும் அ.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில் அ.சா.1 மற்றும் 3 ஆகியோர் சண்டையானது 30.05.2025 அன்று மாலை சுமார் 07.00 மணியளவில் நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளனர். அதிலும் அ.சா.3 தன்னுடைய குறுக்கு விசாரணையில் சண்டை சுமார் 2 மணி நேரம் நடந்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். இந்த நிலையில் வழக்கின் விசாரணை அதிகாரி எவ்வாறு 30.05.2025 அன்று மாலை 07.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்திருக்க முடியும் என்ற சந்தேகம் வலுவாக எழுகிறது. எனவே எதிரிகளுக்கு எதிராக பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) of BNS. r/w 4 of TNPHW Act ன் கீழான குற்றம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானிக்கப்படுகிறது.

**22.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்தபடி, இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரிகள் பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) of BNS. r/w 4 of TNPHW Act–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை BNSS பிரிவு 271(1)–ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**23.** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்கு சொத்து குறித்த உத்தரவு ஏதுமில்லை.

**24.** எதிரியின் பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்துசெய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 08 ஆம் நாள் திங்கள்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VALLIAMMA Judicial Magistrate No.1 Digitally signed by VALLIAMMA Location: Madurantakam Date: 2026.06.08 10:14:01 +0530

நீதித்துறை நடுவர் எண். 1
மதுராந்தகம்.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| List of Witness | Name of the Witness | Description |
|---|---|---|
| PW1 | நீலா க/பெ.விநாயகம் | Victim Witness |
| PW2 | பிச்சைமுத்து த/பெ.எட்டியப்பன் | Eye Witness |
| PW3 | விநாயகம் த/பெ.ஆறுமுகம் | Complainant |
| PW4 | கௌசல்யா த/பெ.விநாயகம் | Victim Witness |
| PW5 | சேகர் த/பெ.ஏழுமலை | Observation Mahazar |
| PW6 | குப்பன் த/பெ.சொக்கலிங்கம் | Observation Mahazar |
| PW7 | டாக்டர்.கயல்விழி | The treating doctor of Witness and given AR Copy |
| PW8 | இளங்கோவன் /சிறப்பு உதவி ஆய்வாளர் | Investigating Officer |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| Exhibit No. | Description of the Exhibits | Proved by/ Attested by |
|---|---|---|
| Ex.P.1 | புகார் வாக்குமூலம் | PW-3 |

| | | |
|---|---|---|
| Ex.P.2 | விநாயகத்திற்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | PW–7 |
| Ex.P.3 | நீலாவிற்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | PW–7 |
| Ex.P.4 | கௌசல்யாவிற்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | PW–7 |
| Ex.P.5 | முதல் தகவல் அறிக்கை | PW–8 |
| Ex.P.6 | பார்வை மகசர் | PW–8 |
| Ex.P.7 | மாதிரி வரைபடம் | PW–8 |

அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை
எதிரி தரப்பு சாட்சிகள் :– இல்லை
எதிரி தரப்பு சான்றாவணம் :– இல்லை
எதிரி தரப்பு சான்று பொருள் :– இல்லை

VALLIAMMA

Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.08 10:14:08 +0530

நீதித்துறை நடுவர் எண். 1.
மதுராந்தகம்.

CC 237/2025

08.06.2026

எதிரிகள் ஆஜர். தீர்ப்பு திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபணமாகததால் எதிரிகள் BNS பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(2) of BNS. r/w 4 of TNPHW Act –ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை Bharathiya Nagarik Suraksha Sanhita, 2023 பிரிவு 271(1)ன் படி எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

JMI/MKM